தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்

**ராமேசுவரம்,**

கச்சத்தீவு திருவிழா நிறைவு பெற்றதையடுத்து ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இலங்கை, இந்திய கடல் பகுதியில் அமைந்துள்ள கச்சத்தீவு புனித அந்தோனியார் கோயில் திருவிழா மார்ச் 15,16 தேதிகளில் நடைபெற்றது. திருவிழாவையொட்டி பாதுகாப்புக் கருதி ராமேசுவரம், பாம்பன், மண்டபம் பகுதிகளைச் சேர்ந்த 1400 க்கும் மேற்பட்ட படகுகளுக்கு கடந்த மார்ச் 13 ஆம் தேதி முதல் மீன்பிடிக்க அனுமதி வழங்காமல் ராமேசுவரம் மீன்வளத்துறை அதிகாரிகள் நிறுத்தி வைத்திருந்தனர். இந்நிலையில் திருவிழா முடிந்ததையொட்டி மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டதால் ராமேசுவரம் பகுதியில் 614 படகுகளிலும், பாம்பனில் 90 படகுகளிலும், மண்டபம் பகுதியில் 220 படகுகளிலும் மீனவர்கள் திங்கள்கிழமை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 50.69 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 50.69 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 805 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 100 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.6 டி.எம்.சி.

**மதிப்புக் கூட்டிய காளான் பொருள்கள் தயாரிப்பு பயிற்சி**

**நாமக்கல்,**

காளானிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு குறித்த இலவசப் பயிற்சி நாமக்கல்லில் மார்ச் 25-ஆம் தேதி அளிக்கப்பட உள்ளது.

மோகனூர் சாலை வேளாண் அறிவியல் நிலையத்தில் அன்று காலை காலை 9 மணிக்கு நடத்தப்பட உள்ள இந்தப் பயிற்சியில், காளானிலுள்ள சத்துக்கள், அதிலிருந்து தயாரிக்கப்படும் மதிப்புக் கூட்டப்பட்டப் பொருள்கள் குறித்து செயல் விளக்கங்கள் அளிக்கப்படும். இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர் பெருமளவில் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயரை நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ 24-ஆம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பெறலாம் என, வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ரூ.6 கோடிக்கு பருத்தி விற்பனை**

**ஆத்தூர்**: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஆறு கோடி ரூபாய்க்கு பருத்தி வர்த்தகம் நடந்தது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள் மற்றும் தானியங்கள் ஏலம் நடந்து வருகிறது. நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி பகுதி மட்டுமின்றி, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த, 2,100

விவசாயிகள், 26 ஆயிரத்து, 600 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இதில், டி.சி.ஹெச்., ரகம் குவிண்டால் அதிகபட்சம், 7,009 ரூபாய், குறைந்தபட்சம், 6,069 ரூபாய், பி.டி., ரகம் அதிகபட்சம், 5,069 ரூபாய், குறைந்தபட்சம், 4,839 ரூபாய் என, விற்பனை செய்யப்பட்டது. 26 ஆயிரத்து, 600 பருத்தி மூட்டைகள், ஆறு கோடி ரூபாய்க்கு விற்பனையானது.

### கால்வாய் புனரமைக்கும் பணி: விவசாயிகள் மகிழ்ச்சி

**கச்சிராயபாளையம்**:கோமுகி அணை ஆற்றிலிருந்து சின்னசேலம் வரை நீர் செல்லும் கால்வாயை 6.5 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் நடந்து வருகிறது.

கச்சிராயபாளையம் அடுத்த கல்வராயன்மலையின் அடிவாரத்தில் கோமுகி அணை அமைந்துள்ளது. இந்த அணை 1966 ல் கட்டி முடிக்கப்பட்டது. கோமுகி அணைக்கு கல்வராயன் மலைப்பகுதியில் உற்பத்தியாகும் கல்படை, பரங்கிநத்தம், பொட்டியம் மூன்று ஆறுகளின் மூலம் தண்ணீர் கிடைக்கிறது.கோமுகி அணையின் பழைய, புதிய பாசனத்தின் மூலம் நேரடியாக 10,860 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த அணையின் மூலம் கச்சிராய பாளையம் சுற்றியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு நீராதாரம் கிடைக்கிறது.கோமுகி அணையிலிருந்து கடத்தூர் வழியாக சின்னசேலம் பகுதிக்கு தண்ணீர் கொண்டு செல்ல கால்வாய் அமைக்கப்பட்டது. சின்னசேலம் பகுதி மேடான பகுதியாக இருப்பதால் தண்ணீர் செல்ல தடை ஏற்பட்டது.புனரைமைப்பு தற்போது நீர்வள நில வள திட்டத்தில் 6.5 கோடி ரூபாய் மதிப்பில் கோமுகி ஆற்றின் கரையை பலப் படுத்துதல் மற்றும் கோமுகி ஆற்றிலிருந்து சின்னசேலம் வரை நீர் செல்லும் கால்வாயை புனரமைக்கும் பணிகள் துவங்கியது. கோமுகி ஆற்றின் அணைக்கட்டின் மேற்புறம் உள்ள கரையை இருபுறமும் 300 மீட்டர் நீளம் பலப் படுத்தி தடுப்பு சுவர் அமைக்கின்றனர். மேலும் கடத்தூர், நமச்சிவாயபுரம் வழியாக சின்னசேலம் செல்லும் கால்வாயை தூர்வாரி ஆழப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.சின்னசேலம் ஏரிக்கு செல்லும் கால்வாயில் கடத்தூர் பிரிவு வாய்காலில் இருந்து கள்ளக்குறிச்சி அருகில் உள்ள விளாந்தங்கல் ஏரி வரை செல்லும் 11 கி.மீ., கால்வாயும் புனரமைக்கப்பட உள்ளது. இந்த கால்வாய்களில் குறுக்கே கல்வெட்டுகள் எனப்படும் 7 சிறுபாலமும் அமைக்கப்பட

உள்ளன.நீர்மட்டம் உயரும் இந்த பணிகளால் கடத்தூர், எலியத்தூர், தொட்டியம், நல்லாத்தூர், குதிரைச்சந்தல் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயனடையும். தண்ணீர் தட்டுபாடும் நீங்கும். சின்னசேலம் ஏரி வரை கோமுகி அணையின் நீர் சென்றால் அப்பகு தியின் குடிநீர் தேவைகளும், விவசாய தேவைகளும் பூர்த்தியாகி நிலத்தடி நீர்மட்டம் உயரும்.

## ஆறாவது கோமாரி தடுப்பு முகாம் கால்நடை வளர்ப்போருக்கு அழைப்பு

**கிருஷ்ணகிரி**: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஆறாம் கட்ட தீவிர கோமாரி நோய் தடுப்பூசி முகாம், வரும், 21ம் தேதி வரை மட்டுமே நடப்பதால், கால்நடை வளர்ப்போர், தங்கள் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியை தவறாமல் போட்டுக்கொள்ள வேண்டும்,' என்று கால்நடை துறையினர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, கால்நடைத்துறை அதிகாரிகள் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தீவிர கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் உள்ள, மூன்று லட்சத்து, 65 ஆயிரம் கால்நடைகளுக்கும், தமிழக அரசின் உத்தரவின்படி, 2014 மார்ச், 1ம் தேதி முதல் தடுப்பூசி போடும் பணிகள் நடந்து வருகிறது. இப்பணிகள் வரும், 21ம் தேதி வரை தொடர்ந்து நடைபெறும். இத்திட்டத்தின் கீழ், நான்கு மாத வயதுக்கு மேல் உள்ள அனைத்து கன்றுகள், மாடுகள் மற்றும் எருமைகளுக்கு இலவசமாக தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்காக, 110 தடுப்பூசி குழுக்கள் அமைக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் கிராமம் வாரியாக முகாமிட்டு, தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது. இத்திட்டம், கடந்த, 1ம் தேதி ஆரம்பிக்கப்பட்டு, 16ம் தேதி வரை, இரண்டு லட்சத்து, 58 ஆயிரத்து, 743 கால்நடைகளுக்கு, கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தடுப்பூசி போடுவதால், பால் குறைந்துவிடும் என்றோ, சினை பாதிக்கப்படும் என்றோ பயப்பட தேவை இல்லை.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஆறாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி பணித்திட்டம், வரும், 21ம் தேதி காலை முதல், மாலை வரை மட்டுமே நடக்க உள்ளதால், கோமாரி நோயால் ஏற்படும் கால்நடை இறப்பையும், அதனால் கால்நடை வளர்ப்போருக்கு ஏற்படும், பொருளாதார இழப்பையும் தவிர்க்க,

அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக்கொள்ள, கால்நடை வளர்ப்போர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

## தேயிலைக்கான மார்ச் மாத விலை நிர்ணயம்

**ஊட்டி** : நீலகிரி, கேரளா மாவட்டத்தில் தேயிலை விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு மார்ச் மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தென் மண்டல தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நீலகிரி, கேரளா, வயநாடு, இடுக்கி மாவட்டங்களில் உள்ள தேயிலை விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு, மார்ச் மாதத்துக்குரிய குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, நீலகிரி மாவட்டத்துக்கு கிலோவுக்கு 13.86 ரூபாய், கேரளா இடுக்கி பகுதிக்கு 10.93 ரூபாய், வயநாடு பகுதிக்கு 11.39 ரூபாய் என, நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே, தொழிற்சாலைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலை பகிர்வு அடிப்படையில், எந்த தொகை அதிகமோ அதை, தொழிற்சாலைகள் விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு வழங்க வேண்டும். இவ்வாறு, அம்பலவாணன் கூறியுள்ளார்.

## காளான் வளர்ப்பு இலவச பயிற்சி

**திண்டுக்கல்** : திண்டுக்கல் கனரா வங்கியின் ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி வகுப்புகள் துவங்கியது. மார்ச் 22 வரை நடைபெற உள்ளது.பயிற்சியை பெற விரும்புபவர்கள் குறைந்த பட்சம் 8 ம் வகுப்பு படித்தவராக இருக்க வேண்டும். வயது 18 லிருந்து 45 க்குள் இருக்க வேண்டும். கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது.

உணவு இலவசமாக வழங்கப்படும்.விண்ணப்பத்துடன் ரேஷன் கார்டு, கல்வி சான்றிதழ் நகல் இணைக்க வேண்டும். இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ வழங்க வேண்டும். திண்டுக்கல் நேருஜி நகர், டி.எம். எஸ்.எஸ்.எஸ்., கட்டடம், ஜான்பால் வளாகம், முதல் மாடி, கனரா வங்கி ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையத்தின் இயக்குனர் அர்ஜூனன் முத்தையாவிடம் விண்ணப்பங்களை

நேரிலோ, தபாலிலோ வழங்கலாம். மேலும் தகவலுக்கு 0451 2434034ல் தொடர்பு கொள்ளலாம்.

**பப்பாளி விளைச்சலில் கடும் சரிவு; ஆண்டிபட்டி பகுதியில் வறட்சி**

**ஆண்டிபட்டி**: வறட்சியால், ஆண்டிபட்டி பகுதியில் இந்த ஆண்டு பப்பாளி விளைச்சலில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.

கோடையின் தேவையில், வெள்ளரி, தர்பூசணிகளுக்கு அடுத்தப்படியாக பொதுமக்கள் பப்பாளியை அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில், திம்மரசநாயக்கனூர், டி.பொம்மிநாயக்கன்பட்டி பகுதியில் 500 ஏக்கரில் பப்பாளி சாகுபடி உள்ளது. நடவு செய்யப்பட்டு ஏழே மாதங்களில் பலன் தரும், ஒட்டு ரக பப்பாளி, அதிகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நன்கு வளர்ந்த பப்பாளி மரங்கள், மூன்றாண்டுகள் வரை தொடர்ந்து பலன் தரும். ஆண்டிபட்டி பகுதியில், வியாபாரிகள் மூலம் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படும்.

தற்போது, வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் பப்பாளி தேவையும் அதிகரித்துள்ளது.

நன்கு விளைந்த பப்பாளியை, பழுப்பதற்கு முன்பே பறித்து, காகிதத்தால் சுற்றி பதப்படுத்தி, பெட்டிகளில் அடைத்து விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

பிப்ரவரி முதல் மே மாதம் வரை, விற்பனையில் மந்த நிலை இருக்கும். தற்போது, பப்பாளி கிலோ 10 ரூபாய் வரை விலை போகிறது.

ஜூன் முதல் தர்பூசணி, வெள்ளரிக்காய் வரத்து குறைந்து, பப்பாளிக்கான தேவை அதிகரிக்கும்.

ஆண்டிபட்டி பகுதியில், கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடரும் வறட்சியால், விளைச்சல் பாதிப்பு ஏற்பட்டு, மரங்களில் காய்ப்புத்தன்மை குறைந்துபோனது. போதுமான அளவு தண்ணீரின்றி, விவசாயிகள் பலரும் பப்பாளி சாகுபடி பரப்பை குறைத்துக்கொண்டனர்.

விவசாயிகள் கூறியதாவது: ஆண்டிபட்டி பகுதியில், கடந்த சில ஆண்டுகளுக்கு முன், 2000 ஏக்கரில் பப்பாளி சாகுபடி இருந்தது.

திம்மரசநாயக்கனூர், பொம்மிநாயக்கன்பட்டியில் விளையும், முதல் தர பப்பாளி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சி, பப்பாளி விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

சராசரியாக தினமும் 30 முதல் 50 டன் வரை, லாரிகள் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டது. படிப்படியாக இந்த அளவு குறைந்து வருகிறது.

தற்போது இப்பகுதியில் விளையும் பப்பாளி, கிலோ ரூ.10 வரை விலை போகிறது. ஜூன், ஜூலை மாதங்களில் விலை அதிகரிக்கும், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வெள்ளரி விலை உயர்வு**



**சேலம்**: சேலம் மாவட்டத்தில் இடைப்பாடி, மேட்டூர் உட்பட பல்வேறு பகுதிகளில் வெள்ளரிக்காய் அதிக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழை இல்லாததால் இந்த ஆண்டு வெள்ளரி விளைச்சல் வழக்கத்தை விட பாதியாக குறைந்துவிட்டது. கடந்த மாதத்தில் ஒரு கிலோ வெள்ளரி ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டது. கோடை வெப்பம் அதிகரிப்பதால் வெள்ளரி விற்பனையும் உயர்ந்துள்ளது. ஆனால் மார்க்கெட்டுக்கு போதிய வரத்து இல்லாத நிலையில் அதன் விலை உயர்ந்து வருகிறது. நேற்று ஒரு கிலோ வெள்ளரி ரூ.160க்கு விற்கப்பட்டது.

**முட்டைக்கு விலை நிர்ணயிப்பதில் தன்னிச்சையாக செயல்படவில்லை என்இசிசி தலைவர் விளக்கம்**



**நாமக்கல்:** நாமக்கல் மண்டலத்தில் கோழி முட்டைக்கு விலை நிர்ணயிப்பதில் தன்னிச்சையாக செயல்படவில்லை என என்இசிசி தலைவர் தெரிவித்துள்ளார். நாமக்கல்லில், கோழிப்பண்ணையாளர்கள் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது. இதற்கு தலைமை வகித்து நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு தலைவர் செல்வராஜ் பேசியதாவது: என்.இ.சி.சி விற்பனை செய்யும் விலைக்கு முட்டையை விற்பனை செய்தால்தான் பண்ணையாளர்கள் லாபம் பெற முடியும். கடந்த ஜனவரி முதல் நாமக்கல் மண்டலத்தில் நெக்(என்இசி) நிர்ணயம் செய்யும் விலைக்குதான் முட்டை விற்கப்படுகின்றன. கடந்த 2 மாதமாக முட்டைக்கு நல்ல தேவை இருந் தது. தற்போது கோடைக்காலம் துவங்கியுள்ளதால் தேவை சற்று குறைகிறது. இப்போதும் என்.இ.சி.சி விலைக்குதான் பண்ணையாளர்கள் விற்பனை செய்யவேண்டும்.

நான் ஒரு விலையை நிர்ணயித்தால், தன்னிச்சையாக நிர்ணயிப்பதாக புகார் கூறுகின்றனர். விலை நிர்ணயிக்க 16 பேர் கொண்ட குழு அமைத்து, அதில் அதிகப்படியானவர்களின் கருத்தை கேட்டு நிர்ணயம் செய்தால், மைனாரிட்டி, மெஜாரிட்டி என பிரச்னையை கிளப்புகின்றனர். எப்படிதான் முட்டைக்கு விலை வைப்பது என தெரியவில்லை. கடந்த 6 நாளில் 55 காசு வரை முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம், என்.இ.சி.சி நிர்ணயிக்கும் விலைக்கு பண்ணையாளர்கள் விற்று லாபம் பெறவேண்டும் என்பதுதான். என்.இ.சி.சி விலையை காட்டிலும் எந்த பண்ணையாளராவது குறைந்த விலைக்கு முட்டையை விற்றால், அது பற்றி பிற பண்ணையாளர்கள் புகார் தெரிவிக்கலாம். இந்த பிரச்னையை தீர்க்க 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

**ஜனவரி மாதத்தில் நாட்டின் தேயிலை உற்பத்தி 6% சரிவு: தேயிலை வாரியம்**



ஜனவரி மாதத்தில் நாட்டின் தேயிலை உற்பத்தி 6% சரிவடைந்து 2 கோடியே 60 ஆயிரம் கிலோவாக குறைந்துள்ளதாக தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் இந்தியா 2வது இடத்தில் உள்ளது. கடந்த 2012-2013 நிதியாண்டு முடிவில் நாட்டின் தேயிலை உற்பத்தி 3.6% அதிகரித்து 113,50,00,000 கிலோவாக இருந்தது குறிப்பிடத்தக்கது. நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் அசாம், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களை தொடர்ந்து தமிழகம், கர்நாடகம் போன்றவை 90% பங்களிப்பை வழங்குகின்றன. இதன்படி கடந்த ஜனவரி மாதத்தில் தேயிலை உற்பத்தி 6% சரிவடைந்து 2 கோடியே 60 ஆயிரம் கிலோவாக உள்ளதாக தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. கணக்கீட்டு காலத்தில் அசாம் மாநிலத்தின் தேயிலை உற்பத்தி 8,00,000 கலோவாக உள்ளது. மேற்குவங்கத்தில் 28,50,000 கிலோவாக அதிகரித்துள்ளதே இதற்கு காரணம் என்று தேயிலை வாரியம் கூறியுள்ளது. அதேசமயம் தமிழ்நாடு, கேரளா, கர்நாடாக உள்ளிட்ட தென் மாநிலங்களின் தேயிலை உற்பத்தி ஜனவரி மாதத்தில் கனிசமாக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகபட்ச பருவமழை பதிவாகியுள்ளதே இதற்கு காரணம் என்றும் தேயிலை வாரியம் சுட்டிக்காட்டியுள்ளது.

**கோமாரி நோயை கட்டுப்படுத்தும் மூலிகை மசால் உருண்டைகள்**

**ஈரோடு**, : பவானி அருகே கண்ணாடிபுதூர் பால் கூட்டுறவு சங்க வளாகத்தில் கவுந்தப்பாடி ஜெயம் பிராணி நல அறக்கட்டளை சார்பில் கால்நடைகளுக்கு பாரம்பரிய சிகிச்சை முகாம் நடந்தது. இதில் கூட்டுறவு சங்க செயலாளர் சாமியப்பன் வரவேற்றார். உலக மகளிர் உரிமைக்கழக உறுப்பினர் ஜெயலட்சுமி

முன்னிலை வகித்தார். அறக்கட்டளை நிறுவனத்தலைவர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார்.

கால்நடை பராமரிப்பு துறை முன்னாள் மண்டல இணை இயக்குநர் டாக்டர் அருணாசலம் கால்நடைகளுக்கு மூலிகை மசால் உருண்டை வழங்கி முகாமை துவக்கி வைத்தார்.

மூலிகை மசால் உருண்டைகளை 3 மாதங்களுக்கு ஒருமுறை கால்நடைகளுக்கு கொடுக்கும்போது நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படுகிறது, கோமாரி, தொண்டை அடைப்பான், சப்பை நோய் போன்ற தொற்று நோய்கள் தாக்காது என்றும், மூலிகை மசால் உருண்டை தயாரிப்பு முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்பவர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டது. கண்ணாடிபுதூர் பால் கூட்டுறவு சங்கத்தில் 78 மாடு, எருமைகளுக்கும், 106 வெள்ளாடுகளுக்கும் மூலிகை மசால் உருண்டை இலவசமாக வழங்கப்பட்டது.

மிக குறைந்த செலவில் மூலிகை மசால் உருண்டைகளை தயாரித்து கொள்ளலாம். மேலும் கால்நடைகளுக்கு வழங்குவதன் மூலம் காய்ச்சல், கழிச்சல், சினைப்பிடிக்காமை, மடிவீக்கம், வயிற்று உப்புசம், தீனி உண்ணாமை முதலான பல நோய்களுக்கும் பாரம்பரிய முறையில் சிகிச்சை வழங்குவது குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டது. பயிற்சிக்கான இலவச புத்தகமும், அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டது.

**தொட்டியம் பகுதியில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும்தாசில்தாரிடம் விவசாயிகள் மனு**

**தொட்டியம்**, : தொட்டியம் பகுதியில் வட கரை வாய்க்காலில் பாசனத்திற்காக காவிரியில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் சங்கத்தினர் தாலுகா அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் தாசில்தாரிடம் மனு அளித்தனர்.

தொட்டியம் தாலுகா வில் காட்டுப்புத்தூர், தொட்டியம், முள்ளிபாடி வாய்கால்கள் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் நெல், வாழை, வெற்றிலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இப்பயிர்களுக்கு கோடைகாலம் என்பதால் அதிக அளவில் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால், தற்போது மேட்டூரிலிருந்து 500

கன அடி வீதம் தண் ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த தண்ணீர் முழுமையாக தொட்டியம் பகுதிக்கு வருவதில்லை. நாமக்கல் மாவட்டம் ஜேடார்பாளையம் தடுப்பணையிலேயே உள்ள கூட்டு குடிநீர் திட்டம் மற் றும் பாசனத்திற்காக பயன்படுத்திவிடுகின்றனர். இத னால் காவிரியில் தண்ணீர் வராததால் இதன் கிளை வாய்கால்களான காட்டுப்புத்தூர், தொட்டி யம், வடகரை வாய்கால், முள்ளிப்பாடி வாய்கால்க ளில் தண்ணீர் முற்றிலும் வருவதில்லை. அதையும் மீறி வரும் அரைகுறை தண்ணீரையும் குடிநீருக்காக முசிறி ஆற்றுப்பாசன கோட்ட பொதுப்பணித் துறை அலுவலர்கள் காவிரி யில் திருப்பி விடுகின்றனர். இதனால் காட்டுப்புத்தூர் தொட்டியம் பகுதியில் உள்ள வெற்றிலை வாழை பயிர்கள் வாடி வதங்குகின் றன. பங்குனி பிறந்தால் பாதி நித்திரை போய்விடும் சித்திரை பிறந்தால் முழு நித்திரை போய்விடும் என்பார்கள் விவசாயிகள் கார ணம் இவ்விரு மாதங்களில் அடிக்கும் சூரைக்காற்றில் வாழைகள் சாய்ந்துவிடும். ஆகவே தொட்டியம் பகுதி விவசாயிகள் வட கரை வாய்க்காலில் பாசனத்திற்காக காவிரியில் இரு ந்து தண்ணீர் திறந்துவிட கோரி உண்ணாவிரதம் இருப்பதற்கு முடிவு செய்த நிலையில் தொட்டியம் தாலுகா அலுவலகத்தில் சமாதானக் கூட்டம் நடைபெற்றது. நேற்று முன்தினம் கூட்டத்திற்கு தொட்டியம் தாசில்தார் வளர்மதி தலை மை வகித்தார். இன்ஸ்பெக்டர் பெரியசாமி தலை மை துணை தாசில்தார் பன்னீர்செல்வம், வாரி ஆய் வாளர் லஜபதிராஜ், விஏஓ விமலாதேவி, ஆனந்த், வரு வாய் உதவி அலுவலர் நாகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பாசனத்திற்கு உரிய தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக தாசில்தார் உறுதியளித் தார். இதில் தொட்டியம் வெற்றிலை விவசாய சங்கத்தலைவர் தியாகராஜன், வாழை உற்பத்தியாளர்கள் சங்கத்தலைவர் சுகுமார், பொருளாளர் மருதை, பாலசமுத்திரம் வெற்றிலை விவசாயிகள் சங்க பொறுப் பா ளர் ஆறுமுகம், ராசு, விவசாயிகள் கிருஷ் ணன், பாரதிய கிசான் சங்க செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் கலந்துகொண்டு தொட்டி யம் தாசில்தாரி டம் கோரி க்கை மனு அளித்தனர்.

முசிறி பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் முருகேசன் அரசு உயர் அதிகாரிகளிடம் கலந்து ஆலோசித்து பாசனத்திற்கு தண்ணீர் தர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

**வாழை சாகுபடியில் ஒரே தாரில் 286 பழங்கள்**

**தா.பேட்டை** : முசிறி பேரூராட்சியின் திடக்கழிவு மேலாண்மை உரக்கிடங்கு பகுதியில் இயற்கை விவசாயம் மூலம் செய்யப்பட்ட வாழை சாகுபடியில் ஒரே வாழைத்தாரில் 286 ரஸ்தாளி வாழைப்பழங்கள் கிடைத்துள்ளன. முசிறி பேரூராட்சிக்கு சொந்தமான திடக்கழிவு மேலாண்மை உரக்கிடங்கு கல்லூரி சாலையில் அமைந்துள்ளது. இங்கு மக்கும்குப்பை, மக்காத குப்பை தரம் பிரிக்கப்பட்டு இயற்கை முறையில் வாழை உட்பட பல்வேறு மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அங்கு பயிரப்பட்ட ஒருவாழை மரத்திலிருந்து 286 ரஸ்தாளி வாழைப்பழங்கள் கிடைத்துள்ளன. முசிறி பேரூராட்சிதலைவர் மாணிக்கம், செயல் அலுவலர் குணாளன், ஆகியோர் இயற்கை விவசாய முறையில் வாழைப்பழம் உற்பத்தி செய்த சுகாதாரஆய்வாளர் (பொ) ரெங்கசாமி, துப்புரவு மேற்பார்வையாளர் சதாசிவம் மற்றும் துப்புரவு பணியாளர்களை பாராட்டினர்.

**மரங்களை மொட்டையாக மாற்றும் தென்னையை தாக்கும் வாடல் நோய் கட்டுப்படுத்த வழிகாட்டல்**

**சேதுபாவாசத்திரம்**,: சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது: தென்னையை தாக்கும் நோய்களில் தஞ்சை வாடல்நோய் மற்றும் குறுத்தழுகல் நோய் மிக முக்கியமானதாகும். தஞ்சை வாடல் நோயானது தென்னையின் தண்டுப்பகுதியின் அடிப்பாகத்தில் பழுப்பும், சிவப்பும் கலந்த சாறு வடியும் மற்றும் வாடல்நோய் தாக்கப்பட்ட மரத்தின் அடிமட்டை கள் பழுப்பு நிறம் அடைந்து காய்ந்து தொங் கும். பிறகு நாளடைவில் மரத்தின் மட்டைகள் கீழே விழுந்து மரம் மொட்டையாக மாறும். இதனை கட்டுப்படுத்திட வறட்சி காலத்தில் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சவேண்டும். நோய் தாக்கிய மரம் ஒன்றிற்கு பரிந்துரைக்கப்படும் ரசாயன உரங்களுடன் 50 கிலோ தொழு உரம் மற்றும் 5 கிலோ வேப் பம் புண்ணாக்கு கலந்து இடவேண்டும். வாழையை ஊடுபயிராக சாகுபடி செய்வதன் மூலம் இந் நோ யின் தாக்கு தலை குறைக்க முடியும். டிரைக்கோடெர்மா ஹார்சியானம் என்ற உயிர் பூசானத்தை 50 கிலோ மக்கிய

தொழு எருவுடன் கலந்து மரத்தை சுற்றி 3 அடி தூரத்தில் வைத்து இந்நோயை கட்டுப்படுத்தலாம். நோய் தாக்கிய ஒவ்வொரு மரத்திற்கும் 40 லிட்டர் வீதம் 1 சத போர்டோ கலவையை (400 கிராம் மயில்துத்தத்தை 20 லிட்டர் நீரிலும், 400 கிராம் நீர்த்த சுண்ணாம்பை 20 லிட்டர் நீரிலும் கரைத்த கலவை) மரத்தை சுற்றி 1.8 மீட்டர் வட்ட பாத்தியில் மண் நன்றாக நனையுமாறு ஊற்றினால் நோய் பூஞ்சானத்தை அழிக்கலாம். இந்நோயை கட்டுப்படுத்திட ஆரியோபஞ்சின்சால் 2 கிராம், தாமிரசல்பேட் 1 கிராம் ஆகியனவற்றை 100 மில்லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் செலுத்தவேண்டும். வேரூட்டம் செய்ய பென்சில் அளவு தடிமன் உள்ள புதிய இளஞ்சிவப்பு வேரினை கூரிய கத்தியால் சாய்வாக வெட்டி மேற்படி கரைசலில் உள்ள பாலிதீன் பையில் நுழைத்து கட்டி வைக்கவேண்டும். குருத்தழுகல் நோயை பொறுத்தமட்டில் தென்னங்கன்றுகளிலும் இளம் மரங்களில் மட்டுமே காணப்படும். குருத்தின் பச்சைநிறம் மாறி மஞ்சளாகி பின்னர் அழுகி வாடிவிடும். இதனை கட்டுப்படுத்திட ஒரு கிலோ மயில்துத்தம் மற்றும் 1 கிலோ சுண்ணாம்பு தூளை தனித்தனியே 5 லிட்டர் நீரில் கரைத்து போர்டோ பசை யை தயாரிக்கவேண்டும். பாதிக்கப்பட்ட குருத்து பகுதியில் இந்த பசையை தடவி மழைநீர் படாதவாறு பார்த்துக்கொண்டால் இந்நோய் எளிதில் கட்டுப்படும். இவ்வாறு நோய் களை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி அவர் அந்த செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

## கோமாரி தடுப்பு முகாம்

**பாபநாசம்**,: கால் நடை பராமரிப்புத் துறை சார்பாக கோமாரி தடுப்பு முகாம் மேல கபிஸ்தலம் ஊராட்சியில் நடந்தது. இதில் இங்கு 200 மாடுகளுக்கும், கபிஸ்தலம் ஊராட்சியில் 750 மாடுகளுக்கும், இராஜகிரி ஊராட்சியில் 350 மாடுகளுக்கும், சருக்கை ஊராட்சியில் 300 மாடுகளுக்கும், உம்பளாப் பாடி ஊராட்சியில் 300 மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. முகாமில் கும்ப கோணம் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் முகமது உதுமான், பாபநாசம் ஒன்றியக் கண்காணிப்பாளர் பழனிசாமி, கபிஸ்தலம் கால் நடை உதவி மருத்துவர் வடி வேலன், கால் நடை ஆய்வா ளர் தனலெட்சுமி, கால் நடை உதவியாளர்கள் சாந்தி, ரவிச் சந்திரன் கலந்துக் கொண்டனர்.

### கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

**நாகை,** : தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிராமங்கள், குக்கிராமங்களிலும் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கடந்த 2011ம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கி 5 சுற்று முடிவடைந்தது. தற்போது 6வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது. நாகை ஒன்றியம் முட்டம் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமில் முட்டம் ஊராட்சியில் உள்ள பசு, எருமை, பிறந்து 4 மாதங்கள் ஆன கன்றுகள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

முகாமில், கால்நடை பராமரிப்பு துறை டாக்டர் ரவிச்சந்திரன் மேற்பார்வையில், கால்நடை உதவி டாக்டர்கள் குமரன், கால்நடை ஆய்வாளர்கள் பாரிவேந்தன், தனசேகரன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் ரவி, பழனிச்சாமி ஆகியோர் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணிகளை செய்தனர்.

### 970 கால்நடைகளுக்கு தொண்டையடைப்பான் தடுப்பூசி

***சீர்காழி,*** : நாகை மாவட்டம் சீர்காழி அருகே விளந்திடசமுத்திரம் ஊராட்சியில் கால்நடைகளுக்கு தொண்டையடைப்பான் நோய் மற்றும் கோமாரி நோய் தடுப்பு ஊசி முகாம் நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் உம்மல்பஜ்ஜிரியா அப்துல்சத்தார் தலைமை வகித்தார்.

ஊராட்சி துணைத்தலைவர் கயல்விழி முன்னிலை வகித் தார். முகாமில், கால்நடை உதவி மருத்துவர்கள் ராஜேஸ்குமார், முருகன் மற்றும் உதவியாளர்கள், 970 கால்நடைகளுக்கு தொண்டைய டைப் பான் மற்றும் கோமாரிநோய் தடுப்பூசி போட்டு சிகிச்சை அளித்தனர்.

கால்நடை ஆய்வாளர் திருநாவுக்கரசு, கால்நடை ஆய்வாளர் (பயிற்சி) லதா, லோகேஸ்வரி, ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் காளிமுத்து, காசிராஜன், மகாலிங்கம், காமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சீர்காழியில் வீட்டுத்தோட்டத்தில் காய்த்த 1 அடிநீள கத்தரிக்காய்**

***சீர்காழி,*** : நாகை மாவட்டம் சீர்காழி சின்னத்தம்பி நகரில் வசிப்பவர் சின்னத்தம்பி (65). இவர் வீட்டு தோட்டத்தில் முல்லை, மல் லிகை, வெண்டை, கத்தரிக்காய் போன்ற செடி களை பயிரிட்டு வருகிறார். இதில் கத்தரிக்காய் செடியில் அதிக அளவில் காய்கள் காய்த்து வருகின்றன.

அவற்றில் ஒரு கத்தரி செடியில் மட்டும் 1 அடி நீளம் இருந்தது. சின்னத்தம்பி ஆச்சிரியத்துடன், பார்த்து அந்த கத்திரிக்காயை பறித்து வீட்டில் வைத்துள்ளார். அதிசய கத்தரிக்காயை அப்பகுதியில் வசிக்கும் பலர் ஆர்வத்துடன் பார்த்து சென்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.47¼ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் ஏலம்**

**அந்தியூர்,**

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.47¼ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் ஏலம் போனது.

<u>கொப்பரை தேங்காய்</u>

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. அந்தியூரை சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்து வந்திருந்த விவசாயிகள் விவசாய விளைபொருட்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் முன்னிலையில் ஏலம் நடைபெற்றது.

விவசாயிகள் மொத்தம் 26 ஆயிரம் தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில், சிறியதேங்காய் 6 ரூபாய்க்கும், பெரியதேங்காய் 16

ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.3 லட்சத்துக்கு விற்பனையானது. கொப்பரை தேங்காய் 100 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 6 ஆயிரத்து 15 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 8 ஆயிரத்து 585 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.4 லட்சத்துக்கு விற்பனையானது.

## மக்காச்சோளம்

வெள்ளைஎள் 150 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 11 ஆயிரத்து 65 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 14 ஆயிரத்து 989 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு விற்பனையானது. ஆமணக்கு 10 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரத்து 329 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 539 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.25 ஆயிரத்துக்கு விற்பனையானது.

மக்காச்சோளம் 100 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 1,186 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,317 ரூபாய்க்கும் என மொத்தம் ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. நிலக்கடலை மொத்தம் 620 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு நிலக்கடலை (பச்சை) குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 1,631 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 2 ஆயிரத்து 701 ரூபாய்க்கும் விற்பனையானது. நிலக்கடலை (காய்ந்தது) குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 2 ஆயிரத்து 701 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 3 ஆயிரத்து 701 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.6 லட்சத்துக்கு விற்பனையானது.

## 47¼ லட்சத்துக்கு விற்பனை

பருத்தி 1,500 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் பி.டி. ரகம் பருத்தி குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 4 ஆயிரத்து 600 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 5 ஆயிரத்து 300 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.20 லட்சத்துக்கு விற்பனையானது. விவசாய விளைபொருட்கள் மொத்தம் 47 லட்சத்து 25 ஆயிரத்துக்கு ஏலம் போனது. திருப்பூர், மேட்டூர், மேட்டுப்பாளையம், தர்மபுரி, விருதுநகர், கர்நாடக மாநிலம் மைசூர் ஆகிய பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் விவசாய விளைபொருட்களை ஏலம் எடுத்துச் சென்றனர்.

**அரகண்டநல்லூர் விற்பனைக்கூடத்திற்கு 2 ஆயிரம் மூட்டை மக்காச்சோளம் வரத்து**



**திருக்கோவிலூர்,**

அரகண்டநல்லூர் விற்பனைக்கூடத்திற்கு 2 ஆயிரம் மூட்டை மக்காச்சோளம் வந்துள்ளது.

**வரத்து அதிகரிப்பபு**

திருக்கோவிலூரை அடுத்த அரகண்ட நல்லூரில் தமிழக அரசின் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் உள்ளது. இந்த விற்பனைக் கூடத்திற்கு நாள்தோறும் வழக்கமாக 700 முதல் ஆயிரத்து 100 மூட்டைகள் வரை மக்காச்சோளம் வருவது வழக்கம். ஆனால் நேற்று வழக்கத்திற்கு மாறாக 2 ஆயிரம் மூட்டைகள் மக்காச்சோளம் வந்தது. இந்நிலையில், இவற்றை வியாபாரிகளும் போட்டிபோட்டு வாங்கினர். இதனால் கடந்த முறை ரூ. 3 ஆயிரத்திற்கு விலைபோன 100 கிலோ எடைகொண்ட ஒரு மூட்டை மக்காச்சோளம் நேற்று ரூ.3 ஆயிரத்து 300-க்கு விலை போனது. இதே போல் நேற்று நெல்வரத்தானது வழக்கம் போல் சுமார் 7 ஆயிரம் மூட்டையாக இருந்தது.

அதன்படி 75 கிலோ எடைகொண்ட ஏ.டி.டி. 39 ரக நெல் ரூ. ஆயிரத்து 49ஆகவும், ஏ.டி.டி 45 ரகம் ரூ.ஆயிரத்து 10ஆகவும், குண்டு ரகம் ரூ.ஆயிரத்து 109ஆகவும் இருந்தது. மேலும் மற்ற விவசாய விலைபொருட்களின் விலை நிலவரங்கள் வருமாறு:- 100 கிலோ எடைகொண்ட மணிலா மூட்டை ஒன்று அதிகபட்சம் ரூ.3 ஆயிரத்து 729ஆகவும், குறைந்தபட்சம் ரூ.3 ஆயிரத்து 499ஆகவும் இருந்தது. 75

கிலோ எடைகள் கொண்ட எள் மூட்டை ஒன்று அதிகபட்சமாக ரூ. 7 ஆயிரத்து 456ஆகவும், குறைந்தபட்சம் ரூ.6 ஆயிரத்து 127ஆகவும் இருந்தது. மேலும் , உளுந்து அதிகபட்சம் ரூ. 5 ஆயிரத்து 307ஆகவும், குறைந்தபட்சம் ரூ.4 ஆயிரத்து 769ஆகவும், பச்சை பயிறு அதிகபட்சம் ரூ.6 ஆயிரத்து 369ஆகவும், குறைந்தபட்சம் ரூ.6 ஆயிரத்து 169 ஆகவும், கேழ்வரகு அதிகபட்சம் ஆயிரத்து 985ஆகவும், குறைந்தபட்சம் ஆயிரத்து 765ஆகவும் இருந்தது.

**சின்னமனூர் பகுதியில் தர்பூசணி விற்பனை தொடக்கம்**



**சின்னமனூர்,**

தேனி மாவட்டம் சின்ன மனூரை சுற்றி 14 கிராமங்களும், ஹவேவிஸ் மலைப்பகுதியும் உள்ளன. கோடை காலம் தொடங்கி விட்ட நிலையில் இந்த பகுதிகளில் வெயிலின் தாக் கம் அதிகமாக உள்ளது. மக்கள் வெயிலின் உக்கிரத்தை தாங்க முடியாமல் உடலுக்கு குளிர்ச்சி தரும் பானங்கள், பழங்கள் சாப்பிட தொடங்கி யுள்ளனர். தற்போது தர்பூசணி, கம்பங்கூழ் விற்பனை களை கட்டி இருக்கிறது. கடைகளில் தினசரி 500 கிலோவிற்கு மேலாக தர்பூசணி விற்பனை ஆகிறது. ஒரு கிலோ ரூ.12 வரை விற்பனை செய்யப் படுகிறது. தேனி–குமுளி தேசிய நெடுஞ்சாலையோரம் தர்பூசணி பழங்கள் அடுக்கி வைக்கப்பட்டு உள்ளது. அந்த வழியாக வரும் சுற்றுலா பயணிகள் இவற்றை பார்த்து விரும்பி சாப்பிட்டு செல்கின்றனர்.